# கண் இமையின் அதிபதி யார்?

## சாந்திப்பிரியா



பண்டைய பாரத நாட்டில் இருந்த நகரம் மிதிலை. இராமாயணத்தைப் படித்த அனைவருக்கும் அது தெரியும். மிதிலையின் பண்டை கால பெயர் விதிஹா. ஒரு காலத்தில் அந்தப் பகுதியை ஆண்டு வந்த மன்னன் மக்களை அடிக்கடி யாகங்களையும், ஹோமங்களையும் செய்து வருமாறுக் கட்டாயப்படுத்தியது மட்டும் அல்லாமல் அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது போல தானும் அவற்றை செய்து வந்தானாம். எவரும் தம்முடைய நாட்டை புனிதமானது அல்ல எனக் கருத மாட்டார்கள் என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம். அந்த யாகத்தை செய்த மன்னன் பெயர் மிதி என்பதாகும். லா என்றால் வைத்திருப்பது என்ற பொருள். அந்த பூமியை தன்னிடம் வைத்துக் கொண்டவன் என்ற பொருளில் மிதி மற்றும் லா வை சேர்த்து ஸ்ரீ மிதிலா என அந்த நாட்டின் பெயர் மாறியது. அதை பிற்காலத்தில் ஜனக மன்னர்களின் பரம்பரையினர் ஆண்டு வந்தனர்.

அப்படிப்பட்ட பரம்பரையில் வந்த இஷ்வாகு என்ற மன்னனின் புதல்வர் நிமி என்பவர். அவர் ஒரு முறை மிகப் பெரிய யாகம் ஒன்றை செய்ய எண்ணினார். அந்த யாகம் சுமார் ஆயிரம் ஆண்டுகள் நடைபெறும் எனவும்

அதை மேற்பார்வையிட்டு சிறந்த முறையில் நடத்தித் தர வேண்டும் எனவும் தம்முடைய இராஜ்ய குருவான வசிஷ்ட முனிவரிடம் வேண்டிக் கொண்டார். ஆனால் வசிஷ்ட முனிவரோ தான் ஏற்கனவே இந்திரனுக்கு ஒரு யாகத்தை ஐந்நூறு வருடங்கள் நடத்திக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு விட்டதாகவும், ஆகவே அந்த யாகம் நடைபெற்றப் பின்னர் அவன் தனது யாகத்தை நடத்திக் கொள்ளலாம் எனக் கூறி விட்டு இந்திரா லோகத்துக்கு சென்று விட்டார்.

ஆனால் நிமி மன்னனால் அத்தனை ஆண்டுகள் பொறுக்க முடியாத நிலை. யாகம் நடத்த இருப்பதே நாட்டின் நல்வாழ்வுக்கு என இருக்கும் பொழுது அதை எப்படி ஐந்நூறு வருடங்கள் தள்ளிப் போடுவது? அரண்மனைக்குத் திரும்பியவரிடம் அவருடைய அமைச்சர்கள் வசிஷ்டருக்குப் பதிலாக கௌதம முனிவரின் மேற்பார்வையில் யாகத்தை நடத்தி விடலாம் என யோஜனை கூறியதை ஏற்றுக் கொண்டு யாகத்தைத் துவக்கி விட்டார். ஆனால் அது குறித்து வஷிஷ்ட முனிவரிடம் இஷ்வாகு கூறவில்லை.

யாகம் பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்து கொண்டு இருந்தது. ஐந்நூறு வருட யாகத்தை இந்திரனுக்கு முடித்துக் கொடுத்து விட்டுத் திரும்பிய வசிஷ்டர், தனக்கு பதிலாக கௌதம முனிவரை வைத்து நிமி யாகம் நடத்திக் கொண்டு இருந்ததைக் கண்டு கோபமுற்று தன்னை அவமானப்படுத்தி விட்டதாகக் கருதி அவன் உயிர் உடலை விட்டு வெளியேறட்டும் என சபித்தார். நிமியோ அந்த யாகத்தை நடத்த வேண்டிய முக்கியத்துவத்தையும் உண்மையான காரணங்களையும் கூறியும் அவர் தந்த எந்த விளக்கத்தையும் வசிஷ்ட முனிவர் ஏற்க மறுக்க, அவனும் பெரிய பண்டிதன் என்பதினால் அவருக்கும் அது போலவே சாபம் இட்டு விட்டான். அதைக் கேட்டு பயந்து போன வசிஷ்ட முனிவர் பகவான் பிரும்மாவிடம் ஓடிச் சென்று தனக்கு ஏற்பட்ட சாபத்தைக் கூறி அழுதார். வசிஷ்ட முனிவரிடம் அவர் செய்த பிழையை சுட்டிக் காட்டிய பகவான் பிரும்மாவும் அவருக்கு மீண்டும் அதே உயிர் கிடைக்கும் என ஆசிர்வதித்தார். அடுத்து சில கணங்களில் நிமி மற்றும் வசிஷ்ட முனிவரின் ஆத்மாக்கள் அவரவர் உடலை விட்டு வெளியேறின.

அதன்படி அவருடைய உயிர் சுற்றி அலைந்து கொண்டிருந்த பொழுது ஊர்வசியின் அழகைக் கண்டு மயங்கி அவளைக் கண்டு மனம் லயித்த மித்ரவருணர் முனியின் உடலில் இருந்து கீழே விழுந்த உயிர் அணு ஒரு மண் சட்டியில் விழ, அதில் போய் கலந்து விட்டது வசிஷ்டரின் உயிர். அந்த மண் சட்டி உடைந்து விழ அகஸ்தியரும் வசிஷ்டரும் அதில் இருந்து தோன்றினர்.

அதே சமயம் நிமியின் உடலில் இருந்து வெளியேறிய உயிரும் சுற்றி அலையத் துவங்கியது. ஆனால் நிமி துவக்கிய யாகத்தை நடத்திக் கொண்டு இருந்த முனிவர்களால் அவருடைய உயிரற்ற உடலும் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்தது. ஒருநாள் நிமி உயிர் பிழைத்து எழுவார் என நம்பினார்கள். யாகம் முடிந்த பின் அதனால் மகிழ்வுற்ற தேவர்கள் சுற்றி அலைந்துக் கொண்டு இருந்த நிமியின் உயிரிடம் உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்ட பொழுது தான் சொர்கத்திற்கு செல்ல விரும்புவதாகவும் தன் நினைவு மக்களிடம் என்றும் இருக்க வேண்டும் எனவும் அவர் வேண்டிக் கொள்ள, அவனை என்றென்றும் மனிதர்களது மனதிலும் இதயத்திலும் நிமி இருக்க அவர்களது மனிதர்களின் கண் இமையாக அவரை மாறுமாறு ஆசி கூறி விட்டனர். பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்த அவருடைய உயிறற்ற உடலில் இருந்து இன்னொரு உயிரை உற்பத்தி ஆகி அதுவே ஜனகராக மாறியது. அந்த ஜனகர் பரம்பரையில் வந்த ஜனக மன்னன் ஒருவருடைய மகள்தான் இராமாயணக் காவியம் உருவாக வழி வகுத்த அன்னை சீதை.

# Who is the authority of Eyes?

## Santhipriya



Those who have read Ramayana would know that Mithila was an ancient city in India. The ancient name of Mithila was Vidiha. The emperor who ruled Mithila not only compelled his folks to perform frequent sacrifices and Yagya but also performed them by himself as role model. He believed that everyone loved their country would not defy his directive. The name of the king who performed the sacrifice was Mithi. La meant to possess. Hence the country which he ruled got the name Mithi +La= Mithila because the country Mithila was under his possession. Subsequently many decades later it was ruled by the dynasty of King Janaka.

The name of the son of King Ishvagu who belonged to Janaka dynasty was Nimi. After taking over the reins of power King Nimi wanted to perform a Yagna likely to stretch beyond 1000 years and approached his royal guru

Maharishi Vashishta to organise the Yagya. Since Maharishi Vashishta had already committed to perform a Yagya for Lord Indira which would go on for next 500 years, he expressed regret for the present and promised to undertake the task after completing the Yagya organized by Lord Indira and proceed to Indira Log.

However King Nimi for obvious reasons could not wait for such a long time or to postpone the Yagya already decided and decided to perform it soon. On the advice of council of ministers who suggested that the Yagya could be done under the command of Maharishi Gotham, the King began the ritual accordingly under the command of Maharishi Gotham, but failed to inform maharishi Vashishta.

After completing the Yagya organised by Lord Indira which ran up to 500 years, Maharishi Vashishta returned to Mithila only to learn that the Yagya was already going on under the command of Maharishi Gotham. He felt insulted and cursed that the King should die very soon. Though King Nimi explained to Maharishi Vashishta the real circumstances and the compulsions under which he had to perform the Yagya, Maharishi Vashishta was unwilling to accept his theory. Since King Nimi too was a highly learned scholar and possessed several powers equal to that of Maharishi Vashishta, he too cursed Maharishi Vashishta to lose his life. Panicked Maharishi Vashishta ran to Lord Brahma and sought his advice on the wrong act which led to reverse effect. Lord Brahma assured that both would regain their life in their original form. Meanwhile both the King and Maharishi died and their souls were wandering seeking rebirth.

As their souls were wandering, one of the Maharishis namely Mithravarunar lost his sense on the beauty of Urvashi and looked at her with lust when his semen fell in a pot. Immediately Maharishi Vashishta's soul entered into it and regained the form of Maharishi Vashishta. The pot fell down and broke when Maharishi Agasthia too emerged from it.

While this was happening on one side, as King Nimi's soul was wandering in Devaloga, his lifeless body was kept preserved by the Rishis who were continuing with the Yagya started by him hoping that he would get back his life anytime. At the end of the Yagya when the pleased celestials came forward to give him any boon desired by the wandering soul of King Nimi, he desired to go to heaven instead of getting revived but desired to ever remain in the memory of his folks on earth. The pleased celestials gave him a boon that he would remain in the heart and mind of people by turning into their eyes which he gladly accepted. The lifeless body of the King kept preserved by the Rishis got birth as King Janaka. One of the Kings in Janaka dynasty King was main character in Ramayana and father of Goddess Sita Devi.